**செங்கோட்டை நகர்மன்றத்தின் சாதாரண கூட்டம் 28.06.2023 அன்று காலை 11.00 மணிக்கு நடைபெற்றதின் நடவடிக்கைகள்**

**மன்றப் பொருள் 01 :**

தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் எண் COLR.6269/2022-A6 நாள் 26-02-2023ல் தென்காசி மாவட்டத்தில் 'ஓயா உழைப்பின் ஓராண்டு, கடைக்கோடி தமிழரின் கனவுகளை தாங்கி நிகழ்ச்சியானது இ.சி.ஈ அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் உள்ள கலையரங்கில் 10 நாட்கள் நடைபெற இருப்பதனைத் தெரிவித்து, விழா நடைபெறும் நாட்களில் செங்கோட்டை நகராட்சியின் சார்பில் மஞ்சள் பையில் 'நீடித்த வளர்ச்சி ' என்ற அச்சிடப்பட்ட பைகள் வழங்க உத் தரவிடப்பட்டுள்ளது, அதன் படி மீண்டும் மஞ்சள் பை திட்டத்தினை ஊக்கு விக்கும் பொருட்டு சுமார் 500 எண்ணம் மஞ்சள் பைகள் கொள்முதல் செய்திடவும் அதற்கு ஆகும் உத்தேச செலவினத்தினை வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலகக் குறிப்பு ; மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண் 218 :** மன்ற அனுமதி வழங்கி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**மன்றப் பொருள் 02 :**

செங்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட நகரளவு வார்டு எண் K, பிளாக்1, நகரளவு எண் 1-7, சர்வே எண் K-1-1-7D, பரப்பளவு 17, ஏக்கர் 36 சமீ பரப்பளவில் நில அபிவிருத்தி பணிகள் விவசாய நிலத்தில் அரசின் அனுமதியின்றி மேற்கொள்ளப்படுவதாக நகராட்சி ஆணையாளரை நான்காவது பிரதிவாதியாக சேர்த்து சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் திரு .மதன் மோகன் என்பவரால் W.P(MD) NO 3123/2023 தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக் கிற்கு நகராட்சி சார்பில் ஆஜராகும் பொருட்டு வழக்கினை திரு.ஆதிமூலப்பாண்டியன் அவர்களிடம் ஒப்படைக்கவும் , அதற்கான வழக்கு கட்டணத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
(ந.க.எண் ; 309/2023/எப்1)
அலுவலகக் குறிப்பு ; மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 219 :** மன்ற அனுமதி அளிக்கப்பட்டு இனி வரும் காலங்களில் அரசு வழக்கறிஞர் அவர்களை நியமிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

**மன்றப் பொருள் 03 :**

செங்கோட்டை நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் திரு.இராஜேந்திரராவ், டூரிஸ்ட் லாட்ஜ் ,2-3-37, ஜவஹர்லால் நேரு ரோடு , செங்கோட்டை என்பவரால் புதிய வார்டு எண் 02, சொத்து வரிவிதிப்பு எண் 144/002/900242 அன்னாரின் கட்டிடத்திற்கு 1993-1994ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சொத்துவரி பொது சீராய்வினை ஆட்சேபணை செய்து தொடரப்பட்ட மேல்முறையீட்டு வழக்கானது தற்பொழுது வரை நிலுவையில் இருந்து வருகிறது . இந்நிலையில் கடந்த 24-03-2022ம் தேதி ரூ .5,00,000/-க்கான காசோலை வழங்கியதற்கு மேற்கண்ட வரிவிதிப்பு எண்ணில் நிலுவை ஆண்டில்

உள்ள சொத்துவரித் தொகையினை ஈடு செய்து கணிணி இரசீது வழங்கப்பட்டுவிட்டது . மேற்கண்ட இரசீதுகளில்

| வ.எண் | ஆண்டு | மொத்த கேட்புத் தொகை | வசூல் தொகை | இரசீது எண் மற்றும் நாள் | கூடுதலாக வசூல் செய்த தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | 2004–2005 I & II (ஒரு வருடத்திற்கு) | 29,744 | 27792 | 144/1/2/21–22/0009890 நாள் 24–03–2022 | 29,744 |
| 2 | | | 1952 | 144/1/2/21–22/0009894 நாள் 24–03–2022 | |
| 3 | | | 27792 | 144/1/2/21–22/0009893 நாள் 24–03–2022 | |
| 4 | | | 1952 | 144/1/2/21–22/0009892 நாள் 24–03–2022 | |
| 5 | 2008–2009 I (ஆறு மாதத்திற்கு) | 37,180 | 8816 | 144/1/2/21–22/0009892 நாள் 24–03–2022 | 8816 |
| 6 | | | 8816 | 144/1/2/21–22/0009894 நாள் 24–03–2022 | |
| 7 | | | 28,364 | 144/1/2/21–22/0009893 நாள் 24–03–2022 | |
| மொத்தம் | | 66,924 | 1,05,484 | | 38,560 |

கூடுதலாக வசூல் செய்த ரூ .38,560/– தொகையினை நிலுவை ஆண்டிற்கான சொத்துவரித் தொகையில் ஈடு செய்து , கணிணியில் வஜா செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு ; மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண் 220 :** அனுமதி வழங்கி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

<u>**மன்றப் பொருள் 04 :**</u>

செங்கோட்டை நகராட்சி அலுவலகப் பணிக்கு தேவைப்படுகின்ற படிவங்கள் , பதிவேடுகள், எழுது பொருட்கள் மற்றும் கணிணி சாதனங்கள் உட்பட அனைத்து பொருட்களையும் அரசு அனுமதி பெற்றுள்ள கூட்டுற வு நிறுவனமான சிவகாசி பிரிண்டர்ஸ் சர்வீஸ் இண்டஸ்ட்ரியல் கோ ஆப் சொஸைட்டி லிமிடெட் , சிவகாசி நிறுவனத்தின் மூலம் கொள்முதல் செய்திட இந்நகர்மன்றத் தீர்மானம் எண் 76 நாள் 20–06–2022ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது, தற்பொழுது 2023–2024ம் ஆண்டிற்கு இவ்வலுவலக பயன்பாட்டிற் கு தேவைப்படும் படிவங்கள் பதிவேடுகள் , எழுது பொருட்கள் மற்றும் கணிணி சாதனங்கள் உட்பட அனைத்து பொருட்களையும் மேற்காணும் அரசு அனுமதி பெற்றுள்ள கூட்டுறவு நிறுவனத்தின் மூலம் கொள்முதல் செய்திடவும் , அதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.5,00,000/–னை வருவாய் மற்றும் மூலதன நிதியில் செலவு மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு ; மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண் 221 :** செலவின அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப் பொருள் 05 :**

நடைபெற்று முடிந்த நகர்ப்புற சாதாரண உள்ளாட்சித் தேர்தல் 2022 பணிக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் , திருநெல்வேலி அவர்களின் செயல்முறை ஆணையின் படி இந்நகராட்சியில் CCTV, Camera, Video Graphic and Live Web Streaming ஆகிய பணிகள் M/s SNR Edatas Private Limited, Hyderabad என்ற நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டது, மேற்காணும் நிறுவனத்தால் DVR மற்றும் NVR போன்ற மின்னணு சாதனங்களுக்கும் செலவிடப்பட்ட தொகையினை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் , திருநெல்வேலி அவர்களின் செயல்முறை ஆணை கடிதம் நக .எண் 3604/2021/அ3 நாள் 17-03-2023ன் படி இந்நகராட்சியில் இருந்து ரூ .70,800/- தொகை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குந ர், திருநெல்வேலி அலுவலகத்திற்கு ECS மூலம் விடுவித்திட உத்தரவு வழங்கப்பட்டுள்ளது . எனவே மேற்காணும் செலவுத் தொகையினை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் , திருநெல்வேலி அலுவலகத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு ; மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண் 222 :** அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப் பொருள் 06 :**

2022-2023ம் ஆண்டு முடிவடைய இன்னும் ஒரு மாதங்கள் மட்டுமே முழுமையாக இருப்பதால், வரி மற்றும் வரியில்லா இனங்களில் 100 சதவீதம் வசூல் இலக்கினை எய்தும் வகையில், செங்கோட்டை நகராட்சி பகுதியில் உள்ள 1 முதல் 24 வார்டுகளில் சொத்து வரி, காலிமனை வரி , தொழில் வரி , குடிநீர் கட்டணம் , குத்தகை இனங்கள் உட்பட உரிமைக்கட்டணம் நிலுவை மற்றும் நடப்புத் தொகைகளை நகராட்சி அலுவலகத்தில் உள்ள கணிணி வசூல் மையத்தில் உடன் செலுத்திட அனைத்து பொது மக்களுக்கும் தெரிவிக்கும் வகையில் ஆட்டோ மூலம் ஒலிப்பெருக்கி வைத்து விளம்பரம் செய்வதற்கும் , மன்றத்தின் முன் அனுமதியினை எதிர்நோக்கி உள்ளூர் விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளித் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | ஆஷிகா ஆட்டோ,<br>திரு.கே. ஜலீல் அண்ணாவி<br>TN76 AF 2930 | ரூ.2500 |
| 2 | சத்திய ஜோதி ஆட்டோ<br>திரு.பி.குமார் | ரூ.2650 |
| 3 | காயத்திரி ஆட்டோ<br>திரு.தி.கண்ணன்<br>TN76 AK 1617 | ரூ.2700 |

அலுவலகக் குறிப்பு ;

1. ஆட்டோ மூலம் விளம்பரம் செய்வதற்கும் அதற்கு ஆகும் உத்தேச செலவினத்தினை வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்

2. மன்றத்தின் முன் அனுமதியினை எதிர்நோக்கி விலைப்புள்ளி கோரியமைக்கும் மன்றம் பின்னேற்று அனுமதி வழங்கலாம்.
3. பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான வி லைப்புள்ளி வழங்கிய ஆஷிகா ஆட்டோ, திரு.கே.ஜலீல் அண்ணாவி என்பவருடைய விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மானம் எண் 223 :** வரி வசூல் பணிகளை தீவிரப்படுத்தும் வகையி ல் விளம்பரம் செய்யப்பட்டு என்ற நிர்வாக காரணத்தால் ஏற்றுக் கொண்டு அனுமதி வழங்கப்படுகிறது . எதிர்வரும் காலங்களில் தவிர்க்கப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்பட்டது

**மன்றப் பொருள் 07 :**

செங்கோட்டை நகராட்சிக்குச் சொந்தமான ஆண்டு குத்தகை இனம் முத்துச்சாமி பூங்கா, நகராட்சி வளாகத்தில் உள்ள பலன் தரும் மரங்கள் அனுபவித்துக் கொள்ளும் உரிமம் மற்றும் பம்பு ஹவுஸ் த லைமை நீரேற்று நிலையப் பகுதி , சாம்பவர் வடகரை ரோடு பகுதி , கே.சி ரோடு நீர்த்தேக்க நிலைய வளாகத்தில் உள்ள பலன் தரும் மரங்கள் அனுபவித்துக் கொள்ளும் உரிமத்தினை குத்தகை அடிப்படையில் ஒப்படைக்கும் நாள் முதல் 31-03-2025 வரை மட்டும் அனுபவித்துக் கொள்ள பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**மறு பொது ஏலம் ;**

| வ.எண் | குத்தகைதாரர் பெயர் மற்றும் முகவரி | ஏலக் கேள்வி தொகை ரூ. |
|---|---|---|
| | பொது ஏலத்தில் எவரும் கல ந்து கொள்ள முன்வரவில்லை. | |

**ஒப்பந்தப்புள்ளி ;**

| வ.எண் | குத்தகைதாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி கேள்வித் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திரு.பி.முகம்மது இஸ்மாயில்<br>366/74, எஸ்.கே.பி தெரு,<br>தென்காசி | ரூ.30,000/- |
| 2 | திரு.M.ஹபிபுல்லா,<br>த/பெ.முகம்மது யூசுப்,<br>22/63, காதர் ஒலி தரகனார் தெரு,<br>செங்கோட்டை | ரூ.28,000/- |

அலுவலகக் குறிப்பு ;
உயர்ந்த ஒப்பந்தப்புள்ளிக் கேள்வித் தொகை கோரிய திரு .முகம்மது இஸ்மாயில், தென்காசி என்பவருடைய கேள்வித் தொகையினை அங்கீகரித்து ஒப்படைக்கும் நாள் முதல் 31-03-2025 வரை மட்டும் அனுபவித்துக் கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண் 224 :** அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப் பொருள் 08 :**

2022ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் 1998க்கு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு 13.04.2023 முதல் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் விதிகள் 2023 நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998 பிரிவு 84 (1)ல் Five Precent of the net property tax payable by an assessee, subject to a maximum of five thousand rupees shall be granted as an incentive who has paid the property tax within thirty days from the date of commencement of the half – year. அதன்படி சொத்து உரிமையாளர்கள் தங்களது முதல் அரையாண்டிற்கான சொத்து வரியினை ஏப்ரல் 30 ஆம் தேதிக்குள் , இரண்டாம் அரையாண்டு சொத்து வரியினை அக்டோபர் 30ஆம் தேதிக்குள் செலுத்தும் சொத்து உரிமையாளர்கள் 5% ஊக்கத் தொகை பெ ற தகுதியுடையவர் ஆகிறார்கள் என்ற விபரத்தினை அனைத்து பொது மக்களுக்கும் தெரிவிக்கும் வகையில் பிளக்ஸ் போர்டு தயார் செய்வதற்கும், துண்டு பிரசுரங்கள் அச்சுப் பணி செய்வதற்கும் பணியின் அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளி பெற்று குறைவான விலைப்புள்ளி வழங்கிய கு மார் ஆர்ட்ஸ், செங்கோட்டை என்பவருக்கு விநியோக உத்தரவு வழங்கிடவும் , உத்தேச செலவினம் ரூ.50,000/–க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணியின் விபரம் | விலைப்புள்ளிதாரர் விபரம் | விலைப்புள்ளி ஒரு பிளக்ஸ் போர்டுக்கு |
|---|---|---|---|
| 1 | டிஜிட்டல் பிளக்ஸ் போர்டு 5X3 மெட்டல் பைப், வெல்டிங் பிரேம் செய்து பிளக்ஸ் போர்டு தயார் செய்து நகர எல்லைப் பகுதிகளில் நிறுவும் பணி உட்பட | குமார் ஆர்ட்ஸ், 77, மெயின் ரோடு, கிழக்கு பஜார், செங்கோட்டை | ரூ.1800 |
| 2 | | கிருஷ்ணா ஆர்ட்ஸ், 51/36, வல்லம் ரோடு, செங்கோட்டை | ரூ.1950 |
| 3 | | ரமனா ஆர்ட்ஸ், ½, வடக்குத்தியம்மன் கோவில் தெரு, செங்கோட்டை | ரூ.2250 |

அலுவலகக் குறிப்பு ;

1. குறைவான விலைப்புள்ளி வழங்கிய குமார் ஆர்ட்ஸ், செங்கோட்டை நிறுவனத்திற்கு மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி விநியோக உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினம் தொகையினை வருவாய் மற்றும் மூலதனநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**தீர்மானம் எண் 225 :** அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப் பொருள் 09 :**

நகராட்சி நிர்வாக ஆணையர் , சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்748/2008/குவ2 நாள் 21–09–2009ன் படி நகராட்சி பகுதியில் புதிதாக குடிநீர் இணைப்புவழங்குவதற்கு சாலை பராமரிப்பு கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு ஒவ்வொரு ஆண்டும்முந்தைய ஆண்டு தொகையுடன் 5 சதவீதம் உயர்த்தப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ள படி 2023–2024ம் ஆண்டிற்கு சாலை பராமரிப்பு கட்டணம் கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது . 01–04–2023 முதல் 31–03–2024 வரை கீழ்காணும் விபரப்படி கட்டணம் வசூல் செய்து புதிய இணைப்பு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| விபரம் | கருங்கல் ஜல்லி சாலை | | தார்சாலை | | சிமிண்ட் சாலை | |
|---|---|---|---|---|---|---|
| | முந்தைய ஆண்டு கட்டணம் 2022–2023 | 2023–2024 ஆம் ஆண்டிற்கான கட்டணம் | முந்தைய ஆண்டு கட்டணம் 2022–2023 | 2023–2024 ஆம் ஆண்டிற்கான கட்டணம் | முந்தைய ஆண்டு கட்டணம் 2022–2023 | 2023–2024 ஆம் ஆண்டிற்கான கட்டணம் |
| குடிநீர் வழங்கும் பிரதான குழாயில் இருந்து 0 முதல் 30 மீட்டர் தொலைவு உள்ள குடியிருப்புகளுக்கு | ரூ.1981 | ரூ.2080 | ரூ.4244 | ரூ.4456 | ரூ.4936 | ரூ.5183 |
| குடிநீர் வழங்கும் பிரதான குழாயில் இருந்து 30 முதல் 90 மீட்டர் தொலைவு உள்ள குடியிருப்புகளுக்கு | ரூ.3111 | ரூ.3266 | ரூ.5375 | ரூ.5643 | ரூ.6033 | ரூ.6334 |

(ந.க.எண்; 1009/2005/இ1)

அலுலகக் குறிப்பு ;

2023–2024 ஆம் ஆண் டு வழங்கப்படும் புதிய குடிநீர் இணைப்புகளுக்கு சாலை பராமரிப்பு கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதனை மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் 226 :** அனுமதி வழங்கப்பட்டது.

<u>மன்றப்பொருள் 10:</u>

முதலமைச்சரின் காலை சிற்றுண்டி வழங்கும் திட்டம் செயல்படுத்தம் பொருட்டு கீழ்காணும் பணியினை செய்வதற்கு 06.04.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ.எண் | பணியின்பெயர் | மதிப்பீடு ரூ . இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1 | செங்கோட்டை நகராட்சிக்குட்பட்ட கச்சேரி காம்பவுண்ட் நடுநிலைப்பள்ளி வளாகத்தில் ஒருங்கிணைந்த சமையற் கூட கட்டிடம் கட்டுதல் | 25.00 | 1) திரு.விஜயபாலன் மதிப்பீட்டை விட 0.07% அதிகம் |
| | | | 2) குணா கன்ஷ்ரக்ஸன்ஸ் மதிப்பீட்டை விட 2.84% குறைவு |
| | | | 3) திரு.சேக் அப்துல் காதர் மதிப்பீட்டை விட 0.80% குறைவு |
| | | | 4) திரு.முகம்மது நிஜாம் மதிப்பீட்டை விட 0.02% குறைவு |

அலுவலக குறிப்பு

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் .2ல் குணா கன்ஷ்ரக்ஸன்ஸ் நிறுவனத்தால் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகையினை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 227 :** அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள் 11 :**

செங்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கு வளாகத்திலுள்ள நிலத்தடி நீர் மாதிரி பரிசோதனை செய்து அறிக்கை வழங்க ரூ 11390/- தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், மாவட்ட சுற்றுச் சுழல் பொறியாளர் , திருநெல்வேலி அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுளளது. மேற்படி தொகை செலுத்தவும் அதற்கான கட்டணத்தை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 228 :** அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள் 12 :**

செங்கோட்டை நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தனியார் ஒப்பந்தம் மூலம் துப்புரவு பணி மேற்கொள்வதற்கு 24.03.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில் நுட்ப அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விபரம்.

| மதிப்பீடு ரூ . இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் ஒப்பந்த விகிதம் |
|---|---|
| 217.00 | 1) Excell Neeat and Tidy Agency Dindugal மதிப்பீட்டு விகிதம் |
| | 2) Raam & Co Madurai மதிப்பீட்டை விட 0.04% குறைவு |

அலுவலக குறிப்பு

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் .2ல் Raam & Co நிறுவனத்தால் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகையினை மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் 229 :** அனுமதி வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

**மன்றப்பொருள் 13 :**

செங்கோட்டை நகராட்சியில் தட்டச்சர் பணியிடம் காலியாக உள் ளதால் அலுவலக பணிகள் பாதிக்காத வகையில் ஆண்டுதோறும் விலைப்புள்ளி கோரி மேற்படி பணி தனியார் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது . மேற்படி பணிக்கு 2022-2023ஆம் ஆண்டிற்கான விலைப்புள்ளி தொகையில் 2023-2024ம் ஆண்டில் மேற்கொள்ள மேற்படி நிறுவனத்தால் கடிதம் வழங்கப்பட்டுள்ளது எனவே, Qtel நிறுவனத்தின் மூலம் அலுவலக தட்டச்சு பணிகள் மேற்கொள்வதற்கும் அதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகையினை வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு
மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண் 230 :** அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள் 14 :**

முதலமைச்சரின் காலை சிற்றுண்டி வழங்கும் திட்டம் – செங்கோட்டை நகராட்சி தொடக்கப்பள்ளிகளில் 1 முதல் 5 ம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியருக்கு அனைத்து பள்ளி நாட்களிலும் ஓராண்டு காலத்திற்கு காலை உணவு வழங்கும் ப ணி மேற்கொள்ள 30.05.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 2 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளில் 1 ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில் நுட்ப தகுதி இல்லாததால் அங்கீகரிக்கப்படவில்லை . தொழில்நுட்ப Bid தகுதி பெற்ற கீழ்காணும் ஒப்பந்தப்புள்ளி விபரம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின்பெயர் | மதிப்பீடு ஒரு பிளேட்க்கு ரூபாய் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1 | முதலமைச்சரின் காலை சிற்றுண்டி வழங்கும் திட்டம் – செங்கோட்டை நகராட்சி தொடக்கப் பள்ளிகளில் 1 முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியருக்கு அனைத்து பள்ளி நாட்களிலும் ஓராண்டு காலத்திற்கு காலை உணவு வழங்கும் பணி மேற்கொள்ள | 27.60 | திரு.எஸ்.சேக் அப்துல் காதர் ஒப்பந்த மதிப்பை விட 1.57% குறைவு |

ந.க.எண்.303–1/2023/இ1

அலுவலக குறிப்பு ;

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் திரு .எஸ்.சேக் அப்துல் காதர் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண் 231 :** மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள் 15 :</u>**

செங்கோட்டை நகராட்சியில் தற்போது 729 Tube Light (40W) மற்றும் 150w SV Lamp 171 மொத்தம் 900 தெரு மின் விளக்குகள் ஸ்ரீகங்கா எலக்ட்ரிக்கல்ஸ் தனியார் நிறுவனம் மூலம் 01–06–2022 முதல் 31–05–2022 வரை இந்நகர்மன்றத் தீர்மானம் 61 எண் 20–05–2022 நாள் தீர்மானத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதன் படி கால நீட்டிப்பு செய்து பராமரிப்பு பணிகள் மே ற்கொள்ளப்பட்டு வருகிறது . தற்போது தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் State Urban Infrastructure Development fund மூலம் பணிகள் மேற்கொள்வதற்கு Midas நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு , மேற்படி பணிகள் மூன்றாம் நபர் ஆய்வு அறிக்கை பெறப்படவில்லை என்பதால் இந்நகரா ட்சியின் தெரு மின் விளக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள காலதாமதம் ஏற்பட்டு வருகிறது . எனவே, Midas நிறுவனம் பணிகள் துவங்கும்

நாள் வரை ஏற்கனவே, பராமரிப்பு பணிகள் செய்து வரும் ஸ்ரீகங்கா எலக்ட்ரிக்கல்ஸ் நிறுவனம் மூலம் ஐந்து மாத காலத்திற்கு (ஜூன் 2023 முதல் அக்டோபர் 2023 மாதம் வரை ) கால நீட்டிப்பு செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

பணியின் அவசர அவசியம் கருதி ஸ்ரீகங்கா எலக்கட்ரிக்கல்ஸ் நிறுவனம் மூலம் தெரு விளக்குகள் பராமரிப்பு பணிகள் 5 மாத காலத்திற்கு ஏற்கனவே உள்ள விலை விகிதத்திற்கு நீட்டிப்பு மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண் 232 :** 5 மாத காலத்திற்கு நீடித்து வழங்கிட அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள் 16 :**

தமிழக அரசின் ஈராண்டு சாதனைகளை கொண்டாடும் வகையில் சாதனைகளை பட்டியலிட்டு கலர் பிளக்ஸ் போர்டு தயார் செய்து இந்நகராட்சிப் பகுதிகளில் 15 பொது இடங்களில் நிறுவிடும் பணி மேற்கொள்ள இருப்பதால் , பணியின் அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளி பெற்று குறைவான விலைப்புள்ளி வழங்கிய குமார் ஆர்ட்ஸ் , செங்கோட்டை என்பவருக்கு விநியோக உத்தரவு வழங்கிடவும் , உத்தேச செலவினம் ரூ.76,000/–க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணியின் விபரம் | விலைப்புள்ளிதாரர் விபரம் | விலைப்புள்ளி 15 பிளக்ஸ் போர்டுக்கு |
|---|---|---|---|
| 1 | டிஜிட்டல் பிளக்ஸ் போர்டு மெட்டல் பைப், வெல்டிங் பிரேம் செய்து பிளக்ஸ் போர்டு தயார் செய்து நகர எல்லைப் பகுதிகளில் 15 இடங்களில் நிறுவும் பணி உட்பட | குமார் ஆர்ட்ஸ், 77, மெயின் ரோடு, கிழக்கு பஜார், செங்கோட்டை | ரூ.75200 |
| 2 | | கிருஷ்ணா ஆர்ட்ஸ், 51/36, வல்லம் ரோடு, செங்கோட்டை | ரூ.79000 |
| 3 | | ரமனா ஆர்ட்ஸ், ½, வடக்குத்தியம்மன் கோவில் தெரு, செங்கோட்டை | ரூ.82000 |

அலுவலகக் குறிப்பு ;

1. குறைவான விலைப்புள்ளி வழங்கிய குமார் ஆர்ட்ஸ், செங்கோட்டை நிறுவனத்திற்கு மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி விநியோக உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினம் தொகையினை வருவாய் மற்றும் மூலதனநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**தீர்மானம் எண் 233 :** அலுவலக குறிப்பை ஏற்றுக் கொண்டு அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள் 17 :**

செங்கோட்டை நகராட்சிக்குச் சொந்தமான கீழ்கண்ட இரண்டு ஆண்டு குத்தகை இனம் 31-03-2025 உடன் மூன்று ஆண்டு முடிவடைய இருப்பதால் குத்தகைதாரர்களின் பெயரில் உள்ள காலங்கடந்த வைப்புத் தொகையினை குத்தகைக் கணக்கில் ஈடு செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | குத்தகை இனம் | குத்தகைதாரர் பெயர் | வைப்புத் தொகை வருடம் | வைப்புத் தொகை பதிவேடு பக்கம் எண் மற்றும் வரிசை எண் | காலம் கடந்த வைப்புத் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | பேருந்து நிலைய வளாகத்தில் தொலைக்காட்சிப் பெட்டி வைத்து விளம்பரம் செய்து கொள்ளும் உரிமம் | திரு.கண்ணன் | 2021-2022 (3402001) | பக்கம் எண் 2 வரிசை எண் 1 | ரூ.40,000 |
| 2 | பேருந்து நிலைய வளாகத்தில் உள்ள பொருட்கள் பாதுகாக்கும் அறை அனுபவித்துக் கொள்ளும் உரிமம் | திரு.சரவணன் | 2021-2022 (3402001) | பக்கம் எண் 2 வரிசை எண் 2, 3 | ரூ.20,000 |

அலுவலகக் குறிப்பு ;

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண் 234 :** அனுமதி வழங்கப்பட்டது.

நகர்மன்ற தலைவர்
செங்கோட்டை நகரமன்றம்

பெறுநர்,

நகராட்சி நிர்வாக இயக்குநர்,சென்னை

மாவட்ட ஆட்சித்தலைவர் தென்காசி

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி